1975 மார்ச் 25]

அரசு உயர்நிலைப்பள்ளி மேலத்திருப்பூந்துருத்தி.

*447. வினா.—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மேலத்திருப்பூந்துருத்தி அரசு உயர்நிலைப்பள்ளிப் புதிய கட்டடத்திற்கான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) இணைமானியத் திட்டத்தின் கீழ் ரூ. 25,000 மதிப்பீட்டில் கட்டடம் கட்டுவதற்கு மேற்படி தொகை நிர்வாகப் பொறியாளருக்கு செலுத்தப்பட்டு கட்டிட வேலை துவங்கப்படவுள்ளது.

தொட்டபெட்டா-உதகை இழுவை ரயில்:

*448. வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சுற்றுலாப் பயணிகளைக் கவர தொட்டபெட்டா சிகரத்திற்கும், உதகை நகருக்கும் இடையே இழுவை ரயில் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தொட்டபெட்டா சிகரத்திற்கும் உதகை நகரத்திற்கும் இடையில் எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதையும் அதற்கிடையில் இழுவை இரயில் விட செலவு எவ்வளவு ஆகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது என்பதையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இழுவை இரயில் போடுவது என்பது, செங்குத்தான மலையாக இருந்து அதற்குப் போக வேண்டுமானால், அதற்கு இழுவை இரயில் போடலாம். உதகையிலிருந்து தொட்டபெட்டா மூன்றரை-நான்கு மைல் தூரம் இருக்கும். அப்படிப்பட்ட இடங்களில் இழுவை இரயில் போடுவதற்கில்லை. ஆனால்

[1975 மார்ச் 25

அங்கே கம்பியின் மூலமாக ஏர்-சேர் என்னும் வகையில் அமைக்க ஏற்பாடு செய்யலாமா என்பதைப்பற்றி ஆலோசிக்கப்பட்டது. அது பரிசீலிக்கப்பட்ட வகையில், 30 இலட்ச ரூபாய்க்குமேல் ஆகும் என்று கருதியதன் காரணமாக, அதற்குரிய நிதித் தன்மையை அடிப்படையாக வைத்து செயற்குறிப்பு கைவிடப்பட்டது. மீண்டும் பரிசீலிக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, மது விலக்கை மீண்டும் அமுல்படுத்தியதாலும், குதிரைப் பந்தயத்தை ஒழித்ததாலும் உதகைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதை ஈடு செய்யும் வகையில் இம்மாதிரி இழுவை இரயில் விடுவது போன்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டும், இன்னும் இதுபோன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டும், உதகையை உல்லாச இடமாக ஆக்க இனியாவது அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எந்த எந்த வகையில் உதகமண்டலத்தை சுற்றுப் பயணிகளுக்கு ஏற்ற இடமாக மாற்றலாம் என்பதைப்பற்றியும், அதனைக் கவர்ச்சிகரமாக ஆக்க என்ன என்ன முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்பதைப்பற்றியும் சுற்றுலாத் துறை ஒரு சர்வே நடத்தி வருகிறார்கள். அந்த முறையில்தான் மேல் கம்பி போட்டு, ஏர்-சேர் மூலமாக போக்குவரத்தை விரிவுபடுத்தி அதனை ஒரு கவர்ச்சியான இடமாக அமைப்பது குறித்து கருதிக்கொண்டிருக்கிறோம். முப்பது இலட்ச ரூபாய் செலவாகும் என்பதனால் திட்டம் கைவிடப்பட்டது. எனினும் மீண்டும் சுற்றுலாத் துறை அதைப்பற்றி பரிசீலிக்கும்படியாக அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எந்த எந்த வகையில் உதகையை கவர்ச்சிகரமாக ஆக்கமுடியுமோ அதிலும், அங்கே வருகிறவர்களுக்கு வசதி வாய்ப்பை எந்த எந்த வகையில் அதிகரிக்க முடியுமோ அதை அதிகரிப்பதிலும் மேற்கொண்டு முயற்சிகள் மேற்கொள்வதில் அரசு முயன்று வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார் இப்போதுக்கூட வால்பாரையில் தேயிலை எடுத்துச் செல்ல இந்தமாதிரியான முறை கையாளப்படுகிறது. வெளிநாடுகளிலும் இம்மாதிரி வைத்து டூரிஸ்டுகளை பெரிதும் கவரும் முறைகளைக் கையாண்டு உற்சாகப்படுத்துகிறார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் உதகை ஒரு முக்கியமான இடமாக இருப்பதால் அதுபற்றி மறு பரிசீலனை செய்து, வருகின்ற ஆண்டிலாவது மீண்டும் இத்திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று இத்திட்டத்தை அங்கு கொண்டுவரவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் 1—10—1974 அன்று மகாபலிபுரத்தில் கூடிய சுற்றுலா வளர்ச்சிக் கூட்டத்தில் மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். பரிசீலனை செய்து எந்த அளவுக்கு செலவு ஏற்படும், எந்த முறையிலே நிறைவேற்றலாம் என்பது பற்றி அரசு ஆராயும்.

1975 மார்ச் 25]

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, தற்போது கொடைக்கானலுக்கும் பழனிக்கும் இடையே இப்படிப்பட்ட ஒரு இழுவை ரயில் போடப் படுவதாகச் சொல்லப்படுகிறது. அதைப்போலவே, ஜப்பான் போன்ற நாடுகளில் செய்யப்பட்டிருப்பதைப்போலவே, மேட்டுப்பாளையத்திலிருந்து மேலே செல்வதற்கு இப்படிப்பட்ட வசதிகள் செய்து கொடுத்தால் ஏராளமாக அந்நியச் செல்லாவணி ஈட்ட முடியும். ஆகவே, செலவு அதிகமாக இருந்தாலும் வெளிநாட்டுப் பயணிகளைக் கவரத்தக்க வகையில் இத்தகைய ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சுற்றுலாத் துறையில் அதுபற்றி செயற்குறிப்பு இல்லை. அவைகளை எல்லாம் நிறைவேற்றுவது நல்லதுதான். அதற்கு அடிப்படையாகத் தேவைப்படுவது நிதிவசதி. நிதி வசதி ஏற்படும்போதுதான் அவைகளைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

கொரடாச்சேரி ஒன்றிய மருத்துவமனை.

*449 வினா—திரு. தாழை மு. கருணாநிதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடையளிப்பாரா ?

(அ) தஞ்சை மாவட்டம், கொரடாச்சேரியில் உள்ள ஒன்றிய மருத்துவ மனையை அரசு மேற்கொள்ளும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவரவர்களே, கொரடாச்சேரி தஞ்சை மாவட்டத்தில் ஒரு முக்கியமான பகுதியாக இருந்தும், இன்னும் ஊராட்சி ஒன்றிய மருந்தகமாக இருப்பதால் அதை விரிவு படுத்தவோ, மேலும் சிறப்பாக நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கின்ற முறையில் மருந்துகள் கொடுக்கவோ ஒன்றியத்தால் இயலவில்லை என்பதால் அதை அரசாங்கம் இனியாவது உடனடியாக எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஒன்றியங்களால் நடத்தப்படுகின்ற இத்தகைய மருந்தகங்களில், மாவட்ட கழகத்தால் ஒரு காலத்தில் நடத்தப்பட்டு, அதற்குப் பின்னால் இந்த ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மருந்தகங்களை முதற்கட்டமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசு முடிவுசெய்துள்ளது. அந்த வகையிலே தஞ்சை மாவட்டத்தில் ஏறத்தாழ 40,45 மருந்தகங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS